செய்தி வெளியீடு எண் : 1239 நாள் : 26.06.2023

**சென்னை பெருநகர காவல்துறை சார்பில் பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் "சிற்பி" திட்ட நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (26.6.2023) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை பெருநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற "சிற்பி" நிறைவு விழாவில், சிற்பி திட்டத்தில் பயிற்சி முடித்த 5,000 மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடி அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **சிற்பி கீதம்** என்ற சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்கான பாடலையும் வெளியிட்டார்.

சென்னை பெருநகர காவல்துறை சார்பில் பள்ளி, மாணவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேலும் சிறந்து விளங்கிடவும், நாட்டுப்பற்றுடன் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், அவர்களை நல்வழிப்படுத்தவும், **'சிற்பி' (SIRPI – Students In Responsible Police Initiatives)** என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.09.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்தார். காவல்துறையுடன், பள்ளி மாணவர்களின் நெருக்கத்தை வளர்த்து நல்லுறவை ஏற்படுத்தி, சட்டத்தை மதிக்கும் சிறந்த குடிமக்களாகவும், காவல்துறையின் உண்மையான நண்பர்களாகவும் மாற்றும் உயரிய நோக்கில் "சிற்பி" திட்டம் தொடங்கப்பட்டது.

உன்னதமான, சிறந்த இளைய சமுதாயத்தினரை உருவாக்கிட அரசுப் பள்ளிகளை சேர்ந்த **2,558** மாணவிகள், **2,442** மாணவர்கள் என 5,000 பள்ளி மாணவ, மாணவிகளை கொண்டு **சிற்பி" (SIRPI)** திட்டம் உருவாக்கப்பட்டது. 12 காவல் துறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு பள்ளிக்கு இரண்டு நோடல் ஆசிரியர்கள் வீதம் நியமிக்கப்பட்டு, சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்கு கல்வி, ஒழுக்கம், பொது அறிவு, கல்வி சுற்றுலா என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

சிற்பி திட்டத்தின் மூலம், சிற்பி மாணவ, மாணவியருக்கு பாடத்திட்ட புத்தகங்கள், சீருடைகள் (2 எண்ணிக்கை) வழங்கப்பட்டு, 40 வாரம் பயிற்சி வகுப்புகள் மற்றும் 8 கல்விச் சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பயிற்சி வகுப்புகள் முடிக்கப்பட்டு, சிற்பி திட்டம் நிறைவு பெற்றது.

இப்பயிற்சி காலக்கட்டத்தில் சிற்பி மாணவர்களுக்கு காவல்துறை மற்றும் ஆசிரியர்கள் மூலம் கவாத்து, போக்குவரத்து விதிகள், கணினி வழிக் குற்றங்கள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், நெகிழி ஒழிப்பு, மாசு கட்டுப்பாடு, ஒளி மற்றும் ஒலி மாசு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையை பேணுதல், யோகா, மனித நலம்,

தற்காப்பு, தேசப்பற்று, அரசு வேலைக்கு செல்லத் தேவையான படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய் பிரிவு, இயற்கை விவசாயம், நல்ல தொடுகை, தீய தொடுகை மற்றும் உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டன.

மேலும், சிற்பி மாணவ, மாணவிகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் யோகா வகுப்பில் கலந்து கொண்டு திரிகோண ஆசனம் செய்து, உலக இளம் சாதனையாளர்கள் விருது (World Young Achievers Record), தமிழ்நாடு இளம் சாதனையாளர்கள் விருது (Tamil Nadu Young Achievers Record), உலக ரெக்கார்டு யூனியன் (World Record Union) ஆகிய **உலக சாதனை விருதுகளை பெற்றனர்.**

இயற்கையை பேணும் விதமாக 5,000 மாணவ, மாணவிகளும் **ஐந்து இலட்சம்** விதைபந்துகள் தயார் செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்ததுடன், 5,000 மரக்கன்றுகள் நட்டு சாதனை படைத்ததற்காக **Indian Records Academy மற்றும் Asian Book of Records** ஆகிய **உலக சாதனை விருதுகளை** பெற்றுள்ளனர்.

சிற்பி திட்டத்தை பெருமைப்படுத்தும் விதமாக, கடந்த 26.01.2023 அன்று காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில், சிற்பி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு மிடுக்கான நடைபயின்று அனைவர் கவனத்தையும் ஈர்த்ததுடன், சிற்பி மாணவிகள் குழுவினர் சிறந்த படைத் தலைவருக்கான விருதையும் பெற்று பெருமை சேர்த்தனர்.

சிற்பி நிறைவு விழாவில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in